செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல: 1075 | 1970 ஜூலை 7 செவ்வாய்க்கிழமை | விலை சதம் 5

University of Jaffna Sri Lanka RECEIVED 7-8 Serials Division Library

## கள்ள மதுவை ஒழிப்பதற்கு

# பொலீஸாருக்கு வசதிகள் குறைவு

### ஐ. ஜி. பி. கூறுகிறார்

**சட்ட விரோத மது உற்பத்தியையும் வியாபாரத்தையும் ஒழித்துக் கட்டுவதற்கு, பொலீஸாருக்கு சில வசதிகளைச் செய்து தருமாறு பொலீஸ் அதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயக்கா அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.**

அதிக அதிகாரம், மேலதிக ஊழியர், வாகனங்கள் ஆகிய வசதிகளையே திரு. சேனநாயக்கா அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

மது ஒழிப்பு வேலைகளுக்காக கலால் திணைக்களத்துக்கு தற்போது செலவிடும் பெருந் தொகையான பணத்தை, பொலீஸாருக்கு செலவிட்டால் கள்ள மதுத் தொல்லையை அதி விரைவில் ஒழித்து விடலாம் என பொலீஸ் அதிபர் கருதுகிறார்.

தேவையான வசதிகள் குறைவாக இருப்பதாலேயே இத் தொல்லையை ஒழிக்க பொலீஸாருக்குக் கஷ்டமாக இருப்பதாக திரு. ஸ்டான்லி சேனநாயக்கா கூறினார்.

கலால் திணைக்களத்துக்கு அரசாங்கம் பெருந் தொகைப் பணம் செலவிடுகிறதெனினும் கள்ள மது ஒழிப்பு வேலைகளில் பொலீஸார் செய்வனவற்றில் நூற்றுக்கு இரண்டு பங்கேனும் இவர்களால் செய்ய முடியவில்லை என பொலீஸ் பகுதி பேச்சாளர் ஒருவர் கூறினார். (ல)



உள்ளூர் மோஸ்தர் உலகில் துனக்கென தனிப் புகழ்பெற்றுள்ள அழகி ஆன், மினி உடைகளை விரும்பி அணிகிறார்.

## ரப்பர் பலகையில் தளபாடங்கள்!

ரப்பர் பலகையில் நாற்காலி, மேசை போன்ற பொருட்கள் செய்வதற்கான வேலைத் திட்டம் ஒன்றை தேசிய சிறு கைத்தொழில் கூட்டுத்தாபனம் ஆரம்பித்துள்ளது.

கைத்தொழில் மந்திரி திரு. ரி. பி. சுபசிங்காவிடம் கூட்டுத்தாபனத்தின் புதிய டைரக்டர் சபை இதற்கான அனுமதியைப் பெற்றுள்ளது.

அதிவிரைவில் ஹொரணை பகுதியில் இதற்கான தொழிற்சாலை ஒன்று நிறுவப்படும்.

ரப்பர் மரத்தில் பால் வற்றியதும் அதை விறகுக்குப் பாவிப்பதே தற்போதுள்ள வழமை. ஆனல், இம்மரத்தில் இருந்து அழகான பொருட்கள் செய்ய முடியும் என இப்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

ரப்பர் மரத்துக்கு ஒருவித இரசாயனப் பொருளை திணித்த பின் அவற்றிலிருந்து இலகுவாக தேவையான பொருட்களை செய்ய முடியும் என்று பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிபுணர் ஒருவரின் உதவியுடன் புதிய டைரக்டர் சபை இம்முறையைக் கண்டுபிடித்தது. (ல)

2½ வருட காலமாக

## 6 ஆயிரம் கடத்தல் சாரிகள் தேங்கிக் கிடக்கின்றன

இலங்கைக்குக் கள்ளத்தனமாகக் கொண்டு வரப்பட்ட போது வட பகுதி சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்ட விலையுயர்ந்த சுமார் 6,000 சாரிகள், கடந்த 2½ வருட காலமாக வீணே தேங்கிக் கிடக்கின்றன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருட்களை சுங்கப் பகுதியினர் ஏலத்தில் விற்பதே வழமை.

ஆனல், மேற்குறிப்பிட்ட 6,000 சாரிகளையும் ஏலத்தில் விற்க வேண்டாமென முன்னுள் அரசின் உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ தகநாயக்கா உத்தரவிட்டிருந்தார்.

பின்பு, இந்த சாரிகளை வெளிநாட்டுத் தூதுவர்கள் மூலமாக வெளிநாடுகளில் விற்க முயற்சி மேற்கொள்ளப் பட்டதாகவும் இம் முயற்சியும் தோல்வி அடைந்ததாகவும் கூறப்படுகிறது. (ல)

### நெசவு ஆலை

வருடத்துக்கு 140 லட்சம் யார் ஜவுளி உற்பத்தி செய்யக்கூடிய நெசவு ஆலை ஒன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதற்குத் தேவையான இயந்திரங்களை போலந்து அரசாங்கம் தந்து உதவும். (ல)

### கைத்தொழில் அமைச்சில் புதிய பிரிவு

விலைக்கட்டுப்பாடு, தரக் கட்டுப்பாடு, உள்நாட்டுப் பொருட்களை விலைப்படுத்துதல் ஆகியவற்றைக் கவனிக்க கைத்தொழில், விஞ்ஞான அமைச்சில் தனிப் பிரிவு ஒன்று நிறுவப்படும்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உதவியுடன் இதற்கான தகவல் சேகரிக்கப்படுகிறது. (ல)

### பாப்பரசருக்கு ராஜாங்க வரவேற்பு

பாப்பாண்டவருக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ராஜாங்க வரவேற்பு அளிக்கப்படும்.

கிழக்கு நாடுகளுக்கு விஜயமொன்றை மேற்கொண்டு கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு ஊடாக பாப்பாண்டவர் செல்லும்போதே அவருக்கு இவ்வாறு வரவேற்பளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

வசதி கிடைத்து, பாப்பரசர் ஓரிரு நாட்கள் இலங்கையில் தங்குவதற்கு இணங்கினரென்றால் அவரை ராஜாங்க விருந்தாளியாக ஏற்றுக் கொள்ளவும் அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. (ல)

### பக்தருக்கு பாதுகாப்பு

மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவில் உற்சவத்துக்குச் செல்லும் உண்மையான பக்தர்களுக்குப் போதிய பாதுகாப்பு நிச்சயமாக அளிக்கப்படும்

பாதுகாப்பு, வெளிவிவகார உதவி அமைச்சர் திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி நேற்று நாடாளுமன்றத்தில் இந்த உறுதியை அளித்தார்.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில்

(4-ம் பக்கம் பார்க்க)

### மந்திரி சபை அனுமதி

அரசாங்க தொழில் நிலையங்களிலும், திணைக்களங்களிலும் முறையே தொழிலாளர் சபைகளும், ஆலோசனைக் கமிட்டிகளும் நிறுவுவதற்கு மந்திரி சபையின் அனுமதி கிடைத்துள்ளது.

நேற்று நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

இத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக மந்திரிகள் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, திரு. லெஸ்லி குணவர்தன, திரு. ரி. பி. சுபசிங்கா ஆகியோர் கொண்ட மந்திரி சபை உப கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (ல)

### மினுட்சி



என்னுங்க ... இ. போ. ச. பஸ்கள் சென்ற இரண்டு மூன்று தினங்களாகப் பெயர்ப் பலகை இல்லாமலும், நேரம் பிந்தியும் அப்படியும் இப்படியும் சற்றே மக்கர் பண்ணுகின்றன?

ஆமாங்க, தலைவர் வெளியூர் போயிருந்த படியாலாக்கும், அதெல்லாம் சரியாய்விடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணக்காரர்களான, காம இச்சை மீறிய

# வேற்று ஆடவரை அவர் வீட்டுக்கு கூட்டி வருவார்

### கணவன் மீது மனைவி கோர்ட்டில் குற்றச்சாட்டு

**"எதிர் மனுதாரான எனது கணவர், தவருன முறையில் பணம் சம்பாதிக்க முயன்ருர். அதற்கு நான் உடன்படாததால், அவர் என்னைத் தூஷித்ததுடன், தாக்கவும் தொடங்கினுர். காம இச்சை மீறிய ஆடவர்களை வீட்டுக்கு அழைத்து வரும் அவர், அவர்களது இச்சையைத் தீர்த்துப் பணம் பெற்றுத் தரும்படி என்னை வற்புறுத்துவார்."**

கும்பஹா மாஜிஸ்திரேட் திரு. பரிந்தா ரணசிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட விவாகரத்து வழக்கு ஒன்றில், மனுதாரான மனைவி மேற்கண்டவாறு கூறினுர்.

இந்த வழக்கில், டெக்கோட்டான என்ற இடத்தைச் சேர்ந்த எம். கே. பி. விமலாவதி என்ற பெண், தன் கணவனை ஹெய்ந்துடுவ என்ற இடத்தைச் சேர்ந்த ஆர். பி. தர்மசிரி என்பவரிடமிருந்து விவாகரத்துக் கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுதார் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:–

"எனது கணவரின் பணம் சம்பாதிக்கும் திட்டத்திற்கு நான் இணங்க மறுத்ததால் அவர் என்னைத் துன்புறுத்தத் தொடங்கினுர்.

"எதிர் மனுதார் பணம் படைத்த ஆடவர்களை எங்கள் வீட்டுக்கு அழைத்துவருவார். அவர்களது காம இச்சையைத் தணியச் செய்து பணம் சம்பாதித்துத்தரும்படி என்னை வற்புறுத்துவார். நான் அந்தத் திட்டத்திற்கு இணங்க மறுத்ததால், அவர் என்னைத் தூஷித்துத் தாக்கத் தொடங்கினுர். எனது வாழ்க்கையே துன்பமயமானது"

மாஜிஸ்திரேட்:– "அவர் அவ்வளவு கொடூரமாக ஏன் உன்னைத் தாக்கினுர்?"

மனுதார்:– "காம இச்சை கட்டுமீறியவர்களின் ஆசையைத் தணித்துப் பணம் சம்பாதித்துக் கொடுக்காததாலேயே அவர் என்னைத் தாக்கினுர். அவரது பயமுறுத்தலுக்குப் பயந்து, கடந்த பெப்ரவரி மாதம் அவரை விட்டுப் பிரிந்து என் பெற்ருேரிடம் சென்றேன். எங்களுக்குக் குழந்தைகள் இல்லையாது. எனவே, நான் அவரிடமிருந்து ஜீவனும்சம் கேட்கவில்லை. அவரிடமிருந்து விவாகரத்துப் பெற்றுத்தந்தால் போதுமானது" (க)

### அகற்றப்படும்

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் உருவப்படத்தைத் தவிர, மற்ற ஐக்கிய முன்னணி அரசாங்கத் தலைவர்களின் படங்கள் இ. போ. ச. பஸ்களிலிருந்து அகற்றப்பட உள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு முடிவு செய்யப்பட்டது. (க)

### ஆறு லட்சம் ரூபா சேர்ந்துள்ளது

நேற்று முன்தினம் வரை, நாட்டைக்காக்கும் நிதிக்கு 5 லட்சத்து 91 ஆயிரம் ரூபா சேர்ந்துள்ளது. அதே நேரத்தில், வரிச்சலுகைச் சான்றிதழ் மூலம் 4 கோடியே 30 லட்சம் ரூபா சேர்ந்திருக்கிறது. (க)

### குற்றத் தடுப்புப் பிரசாரம் பொலீசார் நடத்துவர்

குற்றத் தடுப்பு, வீதிப் பாதுகாப்பு பிரசாரத்தை தொகுதிகள் தோறும் நடாத்தப் பொலீஸார் திட்டமிட்டுள்ளனர். இதில் பாடசாலைகள், சமூக சேவா சங்கங்கள் முக்கிய பங்கு எடுக்கும்.

சமூக, சமய அடிப்படையில் குற்றங்களைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதே இப் பிரசார இயக்கத்தின் நோக்கமாகும்.

வவனியாத் தொகுதியில், பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. கார்லைல் டயஸ், முக்கிய பாடசாலைகளைச் சேர்த்து இப் பிரசார இயக்கத்தை ஆரம்பித்துள்ளார்.

பேச்சுப் போட்டி சுவரொட்டிப் போட்டியும் நடத்தப்படும். பொலீஸார் ஒவ்வொரு பாடசாலைக்கும் சென்று குற்றத் தடுப்பு பிரசாரம் செய்வர்.

தொகுதிகளுக்கு இடையிலான இறுதிப் போட்டி அக்டோபர் மாதத்தில் நடைபெறும்.

பரிசு பெறுவோருக்கு விருதுகள் வழங்கப்படும். (சு–15)

### ஒரே நிர்வாகத்தின் கீழ் துறைமுக வேலைகள் மூன்று

துறைமுக சரக்குக் கூட்டுத்தாபனம், துறைமுக கமிஷன், சுங்குப் பகுதி ஆகிய மூன்றும் அடுத்த ஆண்டுமுதல் ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்க உள்ளன.

இதற்கான திட்டங்களை, கப்பல் தொழில், உல்லாசத் துறை அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்லே தயாரித்து வருகிருர்.

இந்தத் தட்டத்தை மேற்கொள்ளும் முதற் படியாக, மூன்று பிரிவுகளையும் சேர்ந்த தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் அமைச்சர் சந்தித்தார்.

துறைமுக வேலைகள் யாவும் இதனுல் சிறப்பாக நடைபெறும் என்று அமைச்சர் நம்புவதாகத் தெரிகிறது. (க)

### பாலுணவுகளுக்கு விலைக் கட்டுப்பாடு

பாலுணவு வகைகள் யாவற்றையும், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சு விலைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டுவந்துள்ளது.

பாலுணவு வகைகளைப் பதுக்கி வைத்தோ, அல்லது கட்டுப்பாட்டு விலையை மீறியோ விற்கும் வர்த்தகர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என அமைச்சு அறிவித்துள்ளது. (க)

### பிணங்களை ஒன்ருக அடக்கம் செய்வதா?

லண்டன், ஜூலை. 6

பேர்லோனுவுக்கு அருகில் நடைபெற்ற விமான விபத்தில் கொல்லப்பட்டவர்களின் 112 சடலங்களையும் பொதுச் சவக்குழி ஒன்றில் அடக்கம் செய்வது என ஸ்பெயின் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த முடிவு விமான விபத்தில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

### சிறுபான்மை இன இளைஞருக்கு வேலை வாய்ப்பில் முதல் இடம்

சிங்கள, தமிழ் சமூகங்களிடையே உள்ள "தாழ்த்தப்பட்ட மக்கள்" எனக் கூறப்படும் சமூகத்தினருக்கு அரசாங்கம் உதவ உள்ளது. அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் இவர்களுக்கு வேலை வசதிகள் வழங்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டு உள்ளது.

இதுவரை காலமும் தாழ்த்தப்பட்ட மக்கள் எனக் கூறப்படும் இச் சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்கத் திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் குறைந்த தொகையினருக்கே வேலை வசதி வழங்கப்பட்டு வந்தது. முன்னைய ஆட்சிக் காலத்தில் குறிப்பிட்ட சமூக மக்களின் நலனில் எவ்வித அக்கறையும் காட்டப்படவில்லை.

இக் குறைப்பாட்டை நீக்கி, குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அரசாங்கத் திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் பெருமளவில் வேலை வாய்ப்புப் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட உள்ளது.

இச் சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்கள் செய்யக்கூடிய வேலைகளுக்கு அரசாங்கத் திணைக்களங்களில் வெற்றிடங்கள் ஏற்பட்டால் அவர்களுக்கே முதலிடம் அளிக்கப்படும். உதாரணமாக அரசாங்கத் திணைக்களங்களில் அல்லது கூட்டுத்தாபனங்களில் கம்மாள வேலை செய்வதற்கான வெற்றிடங்கள் ஏற்பட்டால் கொல்லர் சமூகத்தைச் சேர்ந்த இளைஞருக்கே அவ்வேலை வழங்கப்படும்.

இதற்கான உத்தரவுகள் விரைவில் திணைக்களங்களின் தலைவர்களுக்கும், கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும் அனுப்பப்படும் என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தந்தி நிருபரிடம் தெரிவித்தார். (க)

### சுவீப் இழுப்பில் சேலைப் பரிசு

தேசிய லொத்தர் சுவீப்பில் ஆறுதல் பரிசு பெறுவோருக்கு இறக்குமதி செய்யப்பட்ட சேலைகள் பரிசாக வழங்கப்பட இருக்கின்றன.

அரசாங்க ஊழியரிடையே விநியோகிக்க முன்னைய அரசாங்கம் 20,000 யார் சேலைகளை இறக்குமதி செய்தது. ஆனுல் இரண்டு லட்சம் பேர் அவற்றிற்காக விண்ணப்பித்தனர்.

எனவே, லங்கா சலுசலா லிமிட்டெட்டும், தேசிய லொத்தர் சபையும் சேர்ந்து இத் திட்டத்தை வகுத்து இந்த இறக்குமதி செய்யப்பட்ட சேலைகளைப் பரிசாக வழங்க இருக்கின்றன. (சு–15)

### தொழிற்சாலை நாசம்!

மெல்போர்ன், ஜூலை. 6

பெட்ரோல் குண்டு ஒன்றினுல் ஏற்பட்ட தீ விபத்தையடுத்து தென் மெல்போர்னில் உள்ள என்ஜினியரிங் தொழிற்சாலை ஒன்று நாசமடைந்தது.

தீ பரவ ஆரம்பித்த 20 நிமிட நேரத்துக்குப்பின்னர் மெல்போர்ன் பத்திரிகைக் காரியாலயம் ஒன்றுக்கு அனுமதேய தொலைபேசி அழைப்பு கிடைத்தது.

பிரஸ்தாப தொழிற்சாலையில் யுத்தத் தளபாடங்கள் உற்பத்தி செய்யப்படுவதால் குண்டு வீசியதாக அந்தத் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.

**தந்தி**
**சிறு விளம்பரங்கள்**

**விற்பனைக்கு**

கட்டிட பொருட்கள்

இறக்குமதி செய்யப்பட்ட முதல் தரமான போட்லான்ட் சீமெந்து 11-75 வீதம் பெற்றுக் கொள்ளலாம். பிரின்ஸ்லீ டிரேடிங் கம்பனி, 414/21, கே. சிறில் சி, பெரேரா மாவத்த, கொழும்பு–13.
R. 66829

**வசியம்**

காதலில் வெற்றியை எதிர்பார்ப்பவர்களுக்கு தவருத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொலை.

**மிக உயர்ந்த நோக்கம்**

அரசினர் ஆஸ்பத்திரி என்ருல் அது யாவருக்கும் பொதுவாக இருத்தல் வேண்டும். ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இருத்தல் தகாது. இந்த உயர் நோக்கத்துடன் அரசினர் ஆஸ்பத்திரிகளில் பணம் செலுத்தித் தங்கும் வார்ட்டுகளை ஒழித்துக் கட்டக் கூட்டு முன்னணி அரசு தீர்மானித்துள்ளது. இவ்வுயர்ந்த நோக்கத்துடன் வர இருக்கும் புதிய மாற்றத்தை இந்த நாட்டில் உள்ள எல்லோரும் மனப்பூர்வமாக வரவேற்பர் என்பது திண்ணம். அந்த நாள் விரைவில் வந்து எய்துவதாக. எனினும் இந்தச் செயலாலும் ஆஸ்பத்திரிகளிலுள்ள இடநெருக்கடியைத் தீர்த்துவிட முடியாது. ஆகலின் போதிய கட்டிட வசதிகளையும் செய்து கொள்வதற்கான வழிவகைகளை வகுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

**தந்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரியம் கைகூடாதெனக் கண்டதும்

# கானகத்தில் காதலர் விஷம் அருந்தி மரணம்

ஒருவரை ஒருவர் உயிருக்கு உயிராகக் காதலித்த முப்பத்திரண்டு வயது ஆடவரும், பன்னிரண்டு வயதுச் சிறுமியும், தங்கள் காதல் கைகூடாமல் போகும் எனக் கண்டதும், கானகத்துக்குச் சென்று, ஒன்ருக விஷம் அருந்தி தற்கொலை செய்துகொண்ட பரிதாப சம்பவம் ஒன்று தொம்பே பகுதியில் நடைபெற்றிருக்கிறது.

கீம்புல்வில என்ற கிராமத்தைச் சேர்ந்த வீரக்கொடிகே தர்மதாச (வயது32) ராமநாயக்குகே குணவதி (வயது 12) ஆகிய இருவரினதும் மரணம் சம்பந்தமாக, தொம்பே திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. அல்பர்ட் குணரத்தின விசாரணை நடத்தினர்.

காலஞ்சென்ற சிறுமி குணவதியின் தந்தையான ராமநாயக்கு ஏமிஸ்அப்பு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:–

"காலஞ்சென்றவர் எனது மூன்ருவது மகள். அவர் தர்மதாசாவைக் காதலித்து வந்தது பற்றி எனக்குத் தெரியாது. சம்பவம் நடைபெற்ற தினம் பிற்பகல் நான் வேலைக்குச் சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பியபொழுது, குணவதி தம்புக்கந்த காட்டில் நஞ்சு குடித்து இறந்து விட்டதாகக் கேள்விப் பட்டேன். அவளுடைய மரணம் சம்பந்தமாக நான் யாரையும் சந்தேகிக்கவில்லை".

காலஞ்சென்ற தர்மதாசாவின் தந்தையான பேதிரிக் அப்பு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:–

"தர்மதாசா புல் வெட்டப் போவதாகச் சொல்லி விட்டு வீட்டை விட்டுப் போனான். அவன் வெகு நேரமாகியும் வீடு திரும்பாததால் நான் அவனைத் தேடிச் சென்றேன். பின்னர்தான், அவன் காட்டில் நஞ்சு குடித்து இறந்து கிடப்பதாகக் கேள்விப் பட்டேன். இந்த மரணம் பற்றி நான் யாரையும் சந்தேகிக்கவில்லை"

காலஞ்சென்ற குணவதியின் சகோதரனான ஆர். அமரசேன சாட்சியமளிக்கையில் கூறியதாவது:–

"எனது சகோதரியைத் திருமணம் செய்ய விரும்புவதாக தர்மதாசா என்னிடம் கூறினர். ஆனல் அவரது பெற்ருேர் அதை விரும்ப மாட்டார்களாதலால், அதைப் பற்றிப் பெற்ருேரிடம் கூறவில்லையென்றும் அவர் சொன்னர். அவர்களுக்கிடையே கடந்த இரண்டு வருடமாக காதல் தொடர்பு இருந்து வந்தது" (க)

## பாசற் கொள்ளை

சாய்ந்தமருது, ஜூலை. 6

கரைவாகு தெற்கு (சாய்ந்தமருது)கிராமத்தில் ஒரு பிடவைக் கடை வியாபாரியிடம் இருந்து 300 ரூபா பெறுமதி வாய்ந்த பிடவைகளைப் பட்டப்பகலில் ஒருவர் கொள்ளை அடித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. (க–281)

## கைமோச கொலைக்கு ஒரு வருடம்

கை மோசக் கொலை புரிந்தார் என்பதற்காக, ஒரு நபருக்கு ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனை அளித்து திர்ப்பு வழங்கினர், மத்திய மாகாண அஸைஸ் நீதியரசர்.

இந்த வழக்கில், களுக்மகே வில்சன் மன்கடவல என்பவர், ஹெரத் பண்டா ரத்னயக்கா என்பவரை, தற்பாதுகர்ப்பின் பொருட்டுக் குத்திக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப் பட்டிருந்தார். (க)

## மர்மச் சடலம் ஒன்று மரத்தில் தொங்கியது

சாய்ந்தமருது, ஜூலை. 6

வரிப்பத்தான் சேனைக் கூட்டுப் பகுதியில் உள்ள மரம் ஒன்றில் ஒரு ஆணின் சடலம், கொலையா? அல்லது தற்கொலையா? என்று கூறமுடியாதபடி மர்மமான முறையில் கயிருென்றில் தொங்குவது கண்டு பிடிக்கப்பட்டது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:– அம்பாறையை அடுத்துள்ள இறக்காமத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரமுள்ள வரிப்பத்தான் சேனையில் மனித நடமாட்டம் இல்லாத காட்டுப் பகுதியில் உள்ள ஆற்றின் அருகில் மரம் ஒன்றில் கயிற்றில் ஆணின் சடலம் ஒன்று தொங்கிக்கிடப்பதை அவ்வாற்றில் நீர் எடுக்கச் சென்ற பெண்மணி ஒருத்திக் கண்டு கூச்சலிடவே அக்கம் பக்கத்திலுள்ள மக்கள் அவ்விடம் சென்று பார்த்தனராம்.

மிகவும் மோசமான நிலையில், கொலையா? தற்கொலையா என்று சந்தேகிக்கும் வகையில், அந்தப் பிணம் தொங்கிக்கிடக்கக் காணப்பட்டதாம். இதுபற்றி இறக்காமம் கிராமசேவகருக்குத் தெரியப் படுத்தியதையடுத்து, பொலீஸார் தீவிரமாகப் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

இச் சடலம் நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குமுன் இறந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகிறது. இதுவரை இவர் பெயர் – ஊர், என்ன இனத்தவர் என்பது பற்றிக் கண்டு பிடிக்கப்படவில்லை. (க–281)

## லஞ்சம் பெற முயன்ற அதிகாரி பிடிபாடு

கொலன்னுவையில் உள்ள எண்ணெய்க் குதத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர், ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை ஒன்றை லஞ்சமாகப் பெற முயன்றபோது பிடிபட்டுள்ளதாக அறியப்படுகிறது. லஞ்சக் கமிஷனர் திணைக்கள அதிகாரிகள் இந்த மோசடியைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

ஆயிரம் ரூபா வாங்கிக் கொண்டு, குறிப்பிட்ட ஒரு தொகைக்கு "இன்வொய்ஸ்" களை பிரஸ்தாப ஊழியர் எண்ணெய் வர்த்தகர் ஒருவருக்கு வழங்க இருந்தாராம்.

எண்ணெய், அல்லது பெட்ரோலுக்கான பெறுதிப் பணம் செலுத்தப்பட்ட பின்னரே இந்த "இன்வொய்ஸ் கள் வழங்கப்படுவது வழக்கம். ஆனல், சம்பந்தப் பட்ட ஊழியர் எண்ணெய்க்குப் பெறுமதியான பணத்தை வாங்காமலே ஆயிரம் ரூபா காசோலையை வாங்கிக் கொண்டு "இன்வொய்ஸை" கள்ளத்தனமாக வழங்க முற்பட்டாராம்.

இந்தப் போலி "இன்வொய்ஸ்" கள் மூலம் 14 ஆயிரம் ரூபா பெறுமதியான பெற்ருேல் மோசடி செய்திருக்க முடியும் என்று லஞ்சக் கமிஷனர் திணைக்களத்தைச் சேர்ந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த மோசடி சம்பந்தமான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (க)

## தந்தையிடம் குழந்தைகளை ஒப்படைக்கத் தீர்ப்பு

"அரசாங்க ஊழியராகயிருந்த போதிலும், நான் திருமணம் செய்யும் போது என் மனைவியிடமிருந்து எத்தகைய சீதனத்தையும் எதிர்பார்க்கவில்லை. மூன்று குழந்தைகள் பிறக்கும் வரையும் எமது தாம்பத்திய வாழ்வு சந்தோஷமாகவே கழிந்தது"

கண்டி நீதவான் திரு. எவ் பி. ஜி- பெர்னண்டோ முன்னிலையில் விசாரிக்கப்பட்ட வழக்கொன்றில் கண்டி சுகாதார சுப்ரிண்டன் காரியாலய இலிகிதர் ஜி. எல். பி- ஏக்கநாயக்கா மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் கருணா ஏக்கநாயக்கா (30) என்னும் பெண் தனது மூன்று குழந்தைகளையும் தன்னிடம் ஒப்படைக்கும்படி தனது கணவன் ஜி. எல்- பி- ஏக்கநாயக்காவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

எதிர் மனுதாரரான ஜி- எல். பி- ஏக்கநாயக்கா மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:–

"நான் சிகரட் புகைப்பவன். ஆனல் குடிப்பதில்லை. திருமணம் ஆனவுடன் எனது வீட்டிலேயே இருவரும் வாழ்ந்தோம்.

மாமன் மாமி தனியாக இருப்பதாகவும், என் மனைவி ஒரே பெண் என்றபடியாலும் தங்களுடன் வந்து வசிக்கும்படி அவர்கள் வற்புறுத்தினர்கள். அதன்படி 1965-ல் இடமாற்றம் பெற்று குருநாகலைக்குப் போய் அங்கு வசித்தோம். வீட்டுச் செலவுக்கு ரூ.100 கொடுப்பேன்.

எனது மாமனும் மாமியும் அண்டை அயலவர்களுடன் சண்டையிடுவார்கள். தூஷண வார்த்தைகளால் ஏசிக் கொள்வார்கள். எனது மாமனுக்குப் பிறந்ததாகக் கூறப்படும் விமலாவதி என்னும் பெண்ணையிட்டு அடிக்கடி சண்டை மூளும். இதனல் எனது மனைவியையும் பிள்ளைகளையும் கூட்டிச் செல்ல விரும்பினேன். ஆனல் மனைவி விரும்பவில்லை.

குழந்தைகளைக் குளிப்பாட்டுவது, துணி தோய்ப்பது எல்லாம் நான் தான்- வேலையாள் வீட்டுக்கு வந்தால் வீட்டு வேலைகளையும் நான்தான் செய்யவேண்டும். இந்தக் காரணங்களால், குழந்தைகளின் வருங்கால நன்மையை முன்னிட்டு, அவர்கள் என்னிடமே இருக்க வேண்டும்" என்று கூறினர்.

நீண்ட விசாரணைக்குப் பின், மூன்று குழந்தைகளையும் தந்தையின் பராமரிப்பில் வைத்திருக்க நீதவான் அனுமதியளித்து தீர்ப்பளித்தார். (க–15)

## இரட்டைக்கொலை

குருவிட்ட பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் இரட்டைக் கொலை நடைபெற்றிருக்கிறது. வை. கே- அசங்கா, வை. பாவா ஆகிய சகோதரர்களே கொலை செய்யப்பட்டுள்ளனர்-

பழைய பகைமையே இந்த இரட்டைக் கொலைக்குக் காரணம் என நம்பப்படுகிறது. இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் நான்கு நபர்களைப் பொலீசார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர். (க)

## புறக்கோட்டை வர்த்தகரின் மோசடி அம்பலமானது

புறக்கோட்டையிலுள்ள ஜவுளி வர்த்தகர் ஒருவர், கோட்டா சம்பந்தமாகச் செய்து வந்ததாகக் கூறப்படும் பெரும்மோசடி ஒன்று அம்பலமாகியுள்ளது.

இந்த மோசடி கண்டு பிடிக்கப் பட்டதைத் தொடர்ந்து, பிரஸ்தாப ஜவுளி நிறுவனத்தின் ஜவுளிக் கோட்டாவை சலு-சல ரத்துச் செய்துள்ளது.

ஒரே கூரையின் கீழ் ஜவுளிக் கடை நடத்திவரும் இந்த வர்த்தகர், ஜவுளி வகைகளை இறக்குமதி செய்வதற்கு இரு கோட்டாக்களைப் பெற்றுவந்ததை லங்கா சலுசல கண்டு பிடித்துள்ளது.

இந்த வர்த்தகர், இரண்டு வர்த்தக நிறுவனங்களின் பெயர்களைக் கொடுத்தே இரு கோட்டாக்களைப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

ஒரு வர்த்தக நிறுவனத்தின் பெயருக்கு மாதம் 4000 யார் ஜவுளி வகைகளையும், மற்றைய வர்த்தக நிறுவனத்தின் பெயருக்கு மாதம் 1000 யார் ஜவுளி வகைகளையும் இவர் பெற்று வந்தார். என்று கூறப்படுகிறது. ஆனல், இரு வர்த்தக நிறுவனங்களின் பெயர்களும் ஒரே கூரையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. தெரிய வந்துள்ளது. (க)

## "இளைஞர்களுடன் போக மகளை அவர் தூண்டுகிருர்"

"தனது மகளை, கண்ட கண்ட இளைஞர்களுடன் சென்று பணம் சம்பாதிக்கும்படி தகப்பனே தூண்டுகிருர். தாய் ஒரு விபசார விடுதியில் இருக்கும் பொழுது பொலீஸாரால் கைது செய்யப்பட்டவள். இந்தப் பெண்ணைப் பெற்ருேருடன் இருக்க விட்டால் அவள் வாழ்க்கை நாசமாக்கப்படும். அவளை, அவளது பேத்தியுடன் இருக்க அனுமதிப்பதே நல்லது"

கொழும்பு தெற்கு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரிக்கப் பட்ட வழக்கு ஒன்றில், இளம் பெண் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

தனது மகளைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு தந்தை வழக்குத் தாக்கல் செய்துள்ளார். மகள் இப்போது பேத்தியின் பாதுகாப்பில் இருக்கிருள்.

இளம் பெண்ணின் வழக்கறிஞர் கோர்ட்டில் மேலும் கூறியதாவது:—

"இந்தப் பெண் பெற்ருேரிடம் போக விரும்பவில்லை. பேத்தியுடனேயே இருக்க விரும்புகிருள். இப்பெண்ணுக்கு திருமணம் செய்து வைக்கவும் பேத்தி முடிவு செய்துள்ளாள்" என்று கூறினர்.

மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க–15)

## நேற்றையச் செய்தியில்...

நேற்றைய "தந்தி"யில் (6–7–70) நான்காம் பக்கத்தில் ஐந்து கலம் தலைப்பில் வெளிவந்த "இரண்டு குழந்தைகளை கொன்ருளாம் அன்னை" என்ற வரிகளை "இரண்டு குழந்தைகளைக் கொல்ல முயன்ருளாம் அன்னை" என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோவியத் ரஷ்யா வின் உதவியுடன்

# பிரமாண்டமான ஒரு வீடமைப்புத் திட்டம்

### அமைச்சர் கெனமன் துரித நடவடிக்கை

இலங்கையிலுள்ள மத்தியதர வகுப்பினரதும், குறைந்த வருமானம் உடையவர்களினதும் குடியிருப்புப் பிரச்சினையை நிவர்த்தி செய்யும் நோக்கத்தோடு, சோவியத் ரஷ்யாவின் உதவியுடன், மிகப் பிரமாண்டமான வீடமைப்புத் திட்டம் ஒன்றை செயல் படுத்த வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இதன் அடிப்படையில், சோவியத் அரசாங்கம், தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பிரமாண்டமான திட்டமொன்றை இங்கு செயல் படுத்தும் என நம்பப்படுகிறது. இந்தத் திட்டத்தை அமுல் நடத்தும் பொழுது, உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் சீமெந்து, மணல் இரும்பு, மரம் முதலியவை பயன்படுத்தப்பட உள்ளன.

கடந்த 1964-ம் ஆண்டிலேயே, இந்த பிரமாண்டமான திட்டத்தை இலங்கையில் செயல் படுத்த சோவியத் ரஷ்யா அரசாங்கம் முன்வந்தது. இது சம்பந்தமாக சோவியத் ரஷ்யாவில் இருந்து ஒரு தூது கோஷ்டியும் இலங்கைக்கு விஜயம் செய்து, திட்டம் பற்றி ஆராய்ந்து, இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது. இதனிடையில், அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

இந்தத் திட்டம் சம்பந்தமாக மீண்டும் சோவியத் ரஷ்யாவுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ள அமைச்சர் திரு. கெனமன் முடிவு செய்திருக்கிறார். இது சம்பந்தமான நடவடிக்கை எடுக்கும் பொருட்டே, அமைச்சர் திரு. கெனமன் இலங்கையில் உள்ள சோவியத் தூதுவரை மிக விரைவில் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் நிறுவப்பட இருக்கும் வீடுகள், காங்கிறீற் சுவர்களையும் தளத்தையும் கொண்டதாக இருக்கும் என்றும்; நாளொன்றுக்கு பத்து முதல் இருபது வீடுகள்வரை அமைக்கப்படுமென்றும்; தொழிலாளர்களின் வேலை நேரம் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியால வீதம் இரண்டு அல்லது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுமென்றும், வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சிலிருந்து கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது.

இந்தத் திட்டத்தின் ஆரம்பத்தில், சோவியத் எஞ்ஜினியர்கள் வேலையைத் தொடங்குவார்கள் என்றும்; விரைவில் உள்நாட்டு எஞ்ஜினியர்களும், கட்டிடக் கலைஞர்களும் திட்டத்தைப் புரிந்து கொண்டவுடன், அவர்கள் வசம் பொறுப்பு ஒப்படைக்கப்படும் என்றும் தெரிகிறது. இத் திட்டத்தில் உள்ளூர் தொழிலாளர்களே பெரும்பாலும் பயன் படுத்தப் படுவார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (க)

பணம் செலுத்திய டிக்கட் இருந்தாலும்

### நிதி அமைச்சரின் அனுமதி பெற்றே வெளிநாடு செல்லலாம்

வெளிநாடு செல்வதற்காக வெளிநாடுகளிலேயே முன் கூட்டிக் கட்டணம் செலுத்தப்பட்ட பிரயாண டிக்கட்களுக்கு வரி விதிக்கப்பட மாட்டாது.

ஆனல் வெளிநாட்டில் கட்டணம் செலுத்தப்பட்ட டிக்கட்டுக்களைப் பெறுவோர் நிதி அமைச்சரின் அனுமதி பெற்றே வெளிநாடு செல்ல முடியும்.

வெளிநாட்டிலிருந்து முன்கூட்டி பணம் செலுத்தப்படும் டிக்கட்களுக்கு வரி விதிக்க முடியாது என்று சட்ட ஆலோசகர்கள் ஆலோசனை கூறியுள்ளதாக நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முக்கிய தேவை ஏற்பட்டால் அன்றி வெளிநாட்டுப் பிரயாணங்கள் தவிர்க்கப்படும். பணம் செலுத்தப்பட்ட வெளிநாட்டு டிக்கட் வைத்திருப்பவர்களும் நிதி அமைச்சரின் அனுமதிபெற்றே செல்லவேண்டும்.

நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி நிலைமை சீரடையும் வரை இலங்கையிலிருந்து வெளிநாடுகள் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்து நீடிக்கும் என நிதி அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

நிதி அமைச்சரின் வேண்டுகோளின் பின்னர் கணிசமான அளவு வெளிநாட்டுப் பிரயாணங்கள் குறைந்துள்ளதாக விமானக் கம்பனிகள் தெரிவிக்கின்றன. (க)

### சிறையில் ஒன்ருக வாழ அனுமதி கோருகிருள்

பீகார், ஜூலை, 6

பயங்கர நக்ஸல்பாரிகளுடன் கைது செய்யப்பட்டு தற்போது பீகார் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள பிரிட்டிஷ் அழகி மேரி டெய்லர் தான் அந்த கோஷ்டிகளின் தலைவனை அமலேந்து சென்னை திருமணம் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சிறையில் வாடும் அழகி மேரியைச் சந்தித்து அவள்பற்றிய தகவல்களை பிரிட்டனிலுள்ள அவளது பெற்றோர்களுக்குத் தெரிவிப்பதற்காக கல்கத்தாவிலுள்ள பிரிட்டிஷ் தூதுவராலய அதிகாரி திரு. ரெஜினல்ட் கோட்லி சென்ருர்.

தன்னைச் சந்தித்த அதிகாரியிடம் தான் மகிழ்ச்சியுடன் சிறையில் இருப்பதாக மேரி தெரிவித்தாள். நக்ஸல்பாரி தலைவன் சென்னைத்தான் ரகசியமாக திருமணம் செய்துள்ளதாகவும், அந்தத் திருமணத்தை சட்டபூர்வமாக அங்கீகரித்து கணவனுடன் வாழ அனுமதி பெற்றுத் தரும்படியும் மேரி வேண்டுகோள் விடுத்தாள்.

அமலேந்து சென் மீது கொண்ட காதலினல் சொந்த நாட்டைவிட்டு இந்தியாவுக்கு வந்து, தன் காதலனுடன் நக்ஸல்பாரி இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டு, பயங்கர ஆயுதங்களுடன் பீகார் காடு ஒன்றில் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளாள் அழகி மேரி. (க)

### பக்தர்களுக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் கூறியதாவது:–

"மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம் ஒரு புதிய பிரச்சினை அல்ல. இந்தப் பிரச்சினையை முந்திய அரசாங்கம் தீர்த்து இருக்கலாம். எனினும் சில காரணங்களை யிட்டு இப்பிரச்சினை தீர்க்கப் படாமல் இருந்து வருகிறது.

"எனினும் இம்முறை மாவிட்டபுரம் ஆலய உற்சவத்திற்குச் செல்லும் உண்மையான பக்தர்களுக்குப் போதிய பாதுகாப்பு நிச்சயம் வழங்கப்படும்.

"அமைதியையும். சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் யாவும் செய்யப்பட்டு உள்ளன.

### கல்வி இலாகா நடவடிக்கை பற்றி ஆராயக் கமிட்டி

தேசிய அரசாங்கத்தின் பதவி காலத்தில் கல்வி அமைச்சில் நடைபெற்ற நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் முதலியன பற்றி விசாரித்து, அறிக்கை சமர்பிக்க மூவர் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

உதவி கல்வி அமைச்சர் திரு. பீ. வை. துடாவை, திரு. எல். ஸி. டீ. சில்வா எம்- பி. தோட்டத் தொழில் அமைச்சு உதவி அமைச்சர் திரு. அல்பேர்ட் காரியவாசம் ஆகிய மூவரையும், இக் கமிட்டியின் அங்கத்தவர்களாக கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதின் மஹ்மூத் நியமித்துள்ளார்.

1965-ம் ஆண்டு மார்ச் 22-ந் தேதியிலிருந்து 1970-ம் ஆண்டு மே மாதம் 26ந் திகதி வரையிலான காலத்திற்குள் கல்வி அமைச்சின் நிர்வாகம் எப்படி நடைபெற்றது என்பது பற்றியும் இந்தக் கமிட்டி ஆராயும்.

குறிப்பிட்ட எல்லைக்குள் வழங்கப்பட்ட புதியநியமனங்கள்,பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் போன்ற பல்வேறு விடயங்களையும் கமிட்டியினர் ஆராய்வர்.

அத்துடன் பரீட்சைப் பகுதியில் நிலவிய சீர்கேடுகள் பற்றியும், முக்கியமாக ஜீ. ஸி. ஈ. பரீட்சைகளில் நடைபெற்ற ஊழல்கள் பற்றியும் இக்கமிட்டியினர் விரிவாக ஆராய்வர்.

கல்வித் திணைக்கள நிர்வாக முறையை புனரமைப்புச் செய்யுமுன், கடந்த ஐந்து வருடகால நிர்வாகம் பற்றி அறிந்து கொள்வதற்காகவே இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (க)

### சிஹானுக் திரும்பி வந்தால் சுட்டுக் கொல்லப்படுவார்?

நாம் பெங், 6

பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னுள் கம்போடிய ஜனதிபதி இளவரசர் சிஹானுக்கிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது அல்லவா?

இதன்படி தற்போது சீனவில் புகலிடம் பெற்றுள்ள இளவரசர் என்ருவது நாடு திரும்பினல் அவர் சுட்டுத் தள்ளப்படுவார்.

சீனவில் இருந்தவாறே தற்போதைய கம்போடிய அரசுக்கு எதிராகப் போட்டி அரசாங்கத்தை நடத்திவரும் இளவரசர் அந்த அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு மீண்டும் பதவிக்குவர முயற்சி செய்கிருர்.

அதே நேரம் அவரை நாட்டுக்குள் கடத்தி வந்து சுட்டுத்தள்ள முயற்சிகள் நடைபெறுகின்றதாகக் கூறப்படுகிறது. (க)


## மணிப்புரி சாரிகள்



"மணிப்புரி" சாதியைச் சேர்ந்த மிக விலை உயர்ந்த சாரிகளைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும். அழகான கண்கவர் சித்திர வேலைகளைக் கொண்ட இச்சாரிகள் நீங்கள் விரும்பும் எல்லா வர்ணங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும். கைதேர்ந்த சித்ரக் கலைஞர்களாலும், வல்லுநர்களாலும் இந்திய கலாபவனத்தில் நடாத்தப்பெற்ற சித்திரக் கண்காட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மனங்கவரும் சித்திர வேலைப்பாடுகளே இச் சாரிகளில் பொருந்தியுள்ளன.

ஒரு சாரியின் விலை ரூபா 29–50 மாத்திரமே.
ஒவ்வொரு சாரியுடனும் ஒரு சட்டைத் துணியும் கவர்ச்சியான ஒரு பிரேஸியரும் இலவசமாக அனுப்பப்படும்.
தபால் செலவு இலவசம்.

இது சாயம் மாருது. நீண்ட காலம் பாவிப்பதோடு எந்தவொரு சவர்க்காரத்திற்கும் தரம் மாருதது. ஸ்திரிக்கை செய்ய வேண்டியதில்லை. இதன் அழகான தரமும், குன்ருத தோற்றமும் உங்கள் மேனியழகை மென்மேலும் அழகுறச் செய்கின்றது. எனவேதான் இதனைப் பிரபல நடிகைகளும் அணிகின்ருர்கள்.

பாடசாலைகளுக்கும் வேண்டிய உற்சவங்களுக்கும் ஏற்ற இந்த சாரியை வாங்குவதற்கு இன்றே நீங்கள் விரும்பும் நிறத்தைக் குறிப்பிட்டு ஒரு தபாலட்டை மூலம் தெரிவிக்கவும். வி. பி. பி. V.P.P. மூலம் அனுப்பி வைக்கப்படும். (பிரேஸியர் அளவுகளை அனுப்புங்கள்.) தயவு செய்து உங்கள் விலாசத்தை தெளிவாக எழுதுங்கள்.

The Manager
ANESCO AGENCIES (TH)
191/1, High Level Road, Kirillapone Colombo 6.


இப் பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 7 ஜூலை 1970.

Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org